# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.297/2023</u>

PW– 2 ராஜசேகரன் நாள்.26.06.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மனுதாரரும் எதிர்மனுதாரரும் எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள் மற்றும் என்னுடைய சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் ஒப்பந்தக்காரராக தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் எத்தனை பேர்கள் வேலைசெய்கிறார்கள் என்றால் வேலையைபொறுத்து இருக்கும் சுமார் 4, 5 பேர்கள் வேலைசெய்கிறார்கள். நான் ஒப்பந்தக்காரராக தொழில் செய்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் இல்லை. இறந்துபோன முருகேசன் என்னிடம் வேலைசெய்தார் என்பதை காட்ட வருகைப்பதிவேடு எதுவும் நான் பராமரிக்கவில்லை. என்னிடம் வேலைசெய்வதற்கு தினமும் சம்பளம் கொடுப்பேனா என்றால், பணம் வருவதை பொறுத்து கொடுப்பேன். சில சமயம் மாதத்திற்கு ஒருமுறை கொடுப்பேன். சம்பளம் கொடுக்கும் போது வவுச்சரில் கையெழுத்து வாங்கும் பழக்கம் கிடையாது. எத்தனை நாட்கள் என்னிடம் முருகேசன் வேலைசெய்தார் என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. உண்மையில் என்னிடம் முருகேசன் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. சம்பவஇடத்திற்கு நான் செல்லும் போது பொதுமக்கள் சுமார் 40, 50 பேர்கள் இருந்தார்கள். நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியிருப்பது போன்று காவல்நிலையத்திற்கு வெளியே சமாதான பேச்சு எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், ஐய்யம்பெருமாளும் மற்றும் சிலரும் சேர்ந்து பேசி எதிர்மனுதாரரை ரூ.5,50,000/– இழப்பீடாக தருமாறு பேசி அனுப்பினோம் என்று பொய்யாக செல்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பது சம்மந்தமாக எழுத்து மூலமாக ஆவணம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் ஏற்கனவே

முன்விரோதம் உண்டு என்றும், அதன் காரணமாக மனுதாரர்களுக்கு ஆதராகவும், மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.16ல் உள்ளது என் மனைவியின் கையெழுத்து. ம.சா.ஆ.16 குறித்து என் மனைவியை அழைத்து விசாரித்தால் தான் விவரம் தெரியும் என்றும் வழக்கிற்காக மேற்படி ஆவணம் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்துபோன முருகேசன் என்னிடம் வேலைபார்க்கவில்லை என்றும், அவர் குடும்பத்திற்கு அதிக நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக என்னிடம் வேலைபார்த்ததாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.